மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர** (உயர்தர) மூன்றாம் **தவணைப் பரீட்சை** – 2026

**General Certificate of Education (Advance Level) 3rt Term Exam – 2026**

| இந்துநாகரிகம் I,II<br>Hindu Civilization | 46 | T | I | மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. **1** தொடக்கம் **25**வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி ( X )** இடுவதன் மூலம் காட்டுக.

**பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.**

01) நாகரிகம் என்ற சொல் முதன் முதல் இடம்பெற்ற தமிழ் நூல்
1) நன்னூல் 2) திருமந்திரம் 3) திருக்குறள்
4) மணிமேகலை 5) நற்றிணை

02) ஆன்மாவின் இறப்புக்குப் பிற்பட்ட நிலை, கன்ம வினைகள், வினைகளுக்கான பயன்கள் பற்றி குறிப்பிடும் சூக்தம்?
1) நாஸதீய சூக்தம் 2) ஜம சூக்தம் 3) புருஷ சூக்தம்
4) வருண சூக்தம் 5) பிரமச்சரிய சூக்தம்

03) சிந்துவெளி நாகரிக காலத்தில் நிலவியதாகக் கருதப்படும் வழிபாட்டு முறைகளைக் கொண்ட தொகுதி
1) பிதிரர் வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு
2) லிங்க வழிபாடு, கண்ணகி வழிபாடு
3) பசுபதி வழிபாடு, ரிஷி விழிபாடு
4) பசுபதி வழிபாடு, தரைப் பெண் வழிபாடு
5) யம வழிபாடு, ரிஷி வழிபாடு

04) சுபதந்திரம் எனச் சிறப்பிக்கப்படுவது?
1) வேதம் 2) புராணம் 3) ஆகமம்
4) இதிகாசம் 5) பகவத்கீதை

05) இராமயணத்தை ஹிந்தி மொழியில் மொழி பெயர்த்தவர் யார்?
1) துளசி தாசர் 2) மீராபாய் 3) இராமாணந்தர்
4) கபீர்தாசர் 5) ஸ்ரீ சைதன்யர்

06) "சூதர் ஓதிய மூவாறு தொல்கதை"எனும் புராணக்கதை பற்றிக் குறிப்பிடும் புராணம்?
1) பெரியபுராணம் 2) குரிய புராணம் 3) பிரம்மபுராணம்
4) அக்கினிபுராணம் 5) கந்தபுராணம்

07) ஆலயக் கிரியைகளின் போது குற்ற நிவர்த்திக்காக ஆற்றப்படும் கிரியை.
1) கர்ஷ்ணம் 2) பிராயச்சித்தம் 3) பிரதிஷ்டை
4) அபிஷேகம் 5) மகோற்சவம்

08) 'கலியுகத்தில் அசரீதி கேட்டவன்' எனக் குறிப்பிடப்படும் மன்னன்.
1) பரமேசுவரவர்மன் 2) இராஜசிம்மன் 3) 2ம் நரசிம்மவர்மன்
4) மாமல்லன் 5) மகேந்திரவர்மன்

Past Papers Wiki



09) உலகிலேயே மிக உயரமான தங்கத்தால் ஆன கோயில் எங்கு அமைந்துள்ளது?
1) மலேசியா 2) கம்போடியா 3) யாவா
4) தாய்லாந்து 5) இந்தியா

10) ஜலசயனம் என அழைக்கப்படும் ஆலயம்.
1) காஞ்சி கைலாசநாதர் கோயில் 2)மாமல்லபுரக் கடற்கரைக்கோயில்
3) தஞ்சைப்பெருங்கோயில் 4) விருபாட்சகர் கோயில் 5) ஐராவதேஸ்வரம்

11) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பூணூல் அணிவித்து அவர்களை மேன்மக்களாகப் பிரகடனப்படுத்தியவர்.
1) இராமகிருஷ்ணர் 2) இராஜராம் மோகன்ராஜ் 3) தயானந்த சரஸ்வதி
4) விவேகானந்தர் 5) ஆறுமுகநாவலர்

12) பாறைகளை மேல் இருந்து கீழாக செதுக்கி அமைக்கப்பட்ட கோயில்கள்.
1) கட்டுத்தளிகள் 2) மலைதளி 3) குடைதளி
4) கற்றளி 5) குடைவரை

13) பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டில் தன்னை "சங்கீர்ணஜாதி" எனக் குறிப்பிட்ட மன்னன்.
1) மகேந்திரவர்மன் 2) இராஜசிங்கன் 3) நந்திவர்மன்
4) பரமேசுவரவர்மன் 5) சமுத்திரகுப்தன்

14) காசிவாசி செந்திநாதையர் எழுதிய நூல்களில் ஒன்று.
1) மெய்ஞ்ஞானதீபம் 2) சைவசமயபோதினி 3) கந்தபுராண நவநீதம்
4) மதங்கசூளாமணி 5) சுப்பிரபேதம்

15) சங்ககாலத்தில் பழையோர் எனச் சிறப்பிக்கப்படும் பாலைநிலக் கடவுள்.
1) அக்கினி 2) உஷை 3) விஷ்ணு
4) முருகன் 5) கொற்றவை

- 16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்கு மிகப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையில் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A** பரிபாடல் | **F** சுருதி | **K** மந்திரம் | P வெளிநாட்டார் குறிப்புக்கள் |
| **B** ஓமகுண்டம் | **G** கடாரம் | **L** கல்வெட்டுகள் | **Q** தைப்பூசம் |
| **C** அவனி நாராயணன் | **H** இலக்கியச் சான்றுகள் | **M** யாழ் | **R** தான சமுத்திரம் |
| **D** மறை | **I** அக்கினி | **N** பத்துமலை | **S** தட்சணை |
| **E** தொல்பொருட் சின்னங்கள் | **J** பாணர் | **O** அபௌருஷயம் | **T** எழுதாக்கிழவி |

16) மலேசிய நாட்டில் பரவிய இந்துப் பண்பாட்டுடன் தொடர்புடைய தொகுதி
1) D, H,, M, T 2) C , G, N , Q 3) A,G,N,P
4) E, G, K, P 5) C, H, L, Q

17) யாகக் கிரியைகளில் இடம் பெறும் விடயங்களைக் குறிக்கும் தொகுதி
1) A, I, L, T 2) B, H, O, T 2) E, I, M, S
4) B, I, K, S 5) D, I, L, R

18) சங்க காலத்தில் இசைக்கலையின் தோற்றத்துடன் தொடர்புடைய தொகுதி
1) A, J, M, R 2) D, J, M, T 3) A, H, N, R
4) B, J, M, P 5) A, J, L, T

19) இந்துநாகரிக வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களை கொண்ட தொகுதி
1) E, H, M, P 2) A, G, L, T 3) E, H, L,P
4) D, F, O, T 5) A, J, N, S

20) வேதங்களை குறிக்கும் வேறு பெயர்களை கொண்ட தொகுதி
1) A, F, O, T 2) D, F, K, R 3) D, G, M, T
4) D, I, O, S 5) D, F, O, T

21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின்கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவு செய்க.

21) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர்
1) தேசத்துக் கோயில்களில் ஒன்று
2) பாவநாசம் இதன் தீர்த்தமாகும்.
3) வேடுவர் மரபுடன் தொடர்புடையது.
4) கல்நந்தி புல் உண்ட சிறப்பு
5) குளக்கோட்டனால் திருப்பணி செய்யப்பட்டது.

22) தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப்பண்பாட்டு அம்சங்கள்.
1) வணிகம் , அரசியல் ஆகிய தொடர்புகளால் பரவியது.
2) அரசு சபைகளில் இந்து சமய முறைப்படி பட்டாபிஷேக விழாக்கள் நடைபெற்றன.
3) "அரசர்கள் கடவுளர்களால் அனுப்பப்பட்டனர்" என்ற நம்பிக்கை சமய நாட்டில் நிலவியது.
4) சமஸ்கிருத மொழி தென்கிழக்காசிய மொழிகளுடன் சங்கமம் ஆகியது.
5) அங்கோவார்ட் சிவாலயம் சூரியவர்மனால் ஜாவாவிற் கட்டப்பட்டது

23) புராணங்கள் இந்துப்பண்பாட்டின் கருவூலம்
1) புராணங்கள் தென்னாட்டுச் சைவ, வைணவ மரபில் எதுவித செல்வாக்கும் செலுத்தவில்லை.
2) குப்தர் காலத்தில் இந்துப்பண்பாடு புராணங்களால் செல்வாக்குப் பெற்றது.
3) புராணங்கள் தச இலட்சணங்களைக் கொண்டவை.
4) புராணங்கள் திருக்கோயில் வழிபாடு, விரத மகிமை, தலயாத்திரை போன்ற பல விடயங்களை எடுத்துக் கூறுகின்றன.
5) பௌராணிகர்களால் தோற்றவிக்கப்பட்டது.

24) வேதவியாசரின் வடமொழி மகாபாரதம்.
1) மகாபாரதத்தில் இராஜதர்மம் உயர்நிலையில் போதிக்கப்பட்டு உள்ளது.
2) இராம அவதாரத்தோடு தொடர்புடையது
3) பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது
4) தமிழில் வில்லிபுத்தூர் ஆழ்வாரால் இயற்றப்பட்டது
5) திரிமூர்த்திக் கோட்பாடு பற்றிக் கூறுகின்றது.

25) இந்துநாகரிகத்தின் தனித்துவமும் சிறப்பும்
1) உலக நாகரிகங்களின் வரிசையில் இந்துநாகரிகம் புகழ் பெற்றது.
2) இந்துநாகரிகத்தின் தொன்மைக்கு வேத இலக்கியங்களே சான்றாகும்.
3) இந்து நாகரிகம் சமயம், கலை, தத்துவம், சமூகம், அறிவியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய சிறப்புடையது.
4) இந்துநாகரிகம் திருக்கோயில் பண்பாட்டின் சிறப்பினைக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்

PAST PAPERS WIKI

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

## பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி I

1. இந்து நாகரிகத்தை வளம்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை கீழ்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   அ) புராணங்களின் ஐவகை இலட்சணங்கள்
   ஆ) புராணங்களின் வகைகள்
   இ) புராணங்கள் சித்தரிக்கும் வழிபாட்டு முறைகள்
   ஈ)தத்துவ சிந்தனைகள் (5×4=20 புள்ளிகள்)

2. "தென்னக வரலாற்றில் சோழர்காலம் பொற்காலமாகும்" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அம்சங்களை ஆராய்க.
   அ) அரசர்களது பங்களிப்புக்கள்
   ஆ) கோயில்களும் நுண்கலை வளர்ச்சியும்
   இ) பக்தி இலக்கியங்கள்
   ஈ) வைணவ நெறியின் வளர்ச்சி (5×4=20 புள்ளிகள்)

3. அண்மையில் இந்துசமயத்தை வளம் பெறச் செய்வதில் ஆறுமுகநாவலர் ஆற்றியபங்களிப்புக்களை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

   (அ) சமயப்பணிகள்
   (ஆ) கல்விப்பணிகள்
   (இ) பதிப்பாசிரியர் பணிகள்
   (ஈ) சமூகப்பணிகள்

   (5×4=20 புள்ளிகள்)

பகுதி II

4. விஜயநகர நாயக்கர் காலத்தில் இந்துப்பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை கீழ்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்குக.
   (அ) அக்கால சூழ்நிலை
   (ஆ) சமயநிலை

   (10×2=20 புள்ளிகள்)

5. இலங்கையில் பொலனறுவைக் காலத்தில் ஏற்பட்ட இந்துசமயத்தின் வளர்ச்சி நிலையினை விளக்குக. ( 20புள்ளிகள் )

6. நவீன சீர்திருத்த இயக்கங்களின் வரிசையில் பிரம்ம சமாஜத்தின் பணிகளையும் முக்கியத்துவத்தையும் பரிசீலிக்க. (20புள்ளிகள்)

7. இலங்கையில் திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் வரலாற்றுச் சிறப்பு, மூர்த்தி, தல, தீர்த்தத்தின் சிறப்புக்களை விளக்குக. (20புள்ளிகள்)

8. சிவனது நடராஜ வடிவத்தின் சிறப்பினை அதன் தோற்றப்பொலிவு, விளக்கி நிற்கும் தத்துவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விளக்குக. (20புள்ளிகள்)

අයිතිය ඇවිරිණි. [All Rights Reserved]

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library